©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 224] CHENNAI, MONDAY, JULY 18, 2011
Aadi 2, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்.**

**கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், லட்சுமிநாராயணபுரம் ஊராட்சி தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் ஆ8/6403/2009.)*

**No. VI(2)/396(a-1)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், லட்சுமிநாராயணபுரம் ஊராட்சி தலைவர் திரு. N. சேகர் என்பவர் அரசாணைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சி நிதியில் இழப்பினை ஏற்படுத்தி பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் முறைகேடுகள் உறுதிபடுத்தப்பட்ட நிலையில் விசாரணை அலுவலரின் அறிக்கையின் அடிப்படையிலும் உரிய அனுமதியின்றி முறைகேடாக தொகை எடுத்து கையாடல் செய்யப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் ஊராட்சி தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அரசு நிதியை கையாடல் செய்து இழப்பு ஏற்படுத்திய லட்சுமிநாராயணபுரம் ஊராட்சி தலைவர் திரு. N. சேகர் என்பவரை லட்சுமிநாராயணபுரம் ஊராட்சி தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த உத்தரவு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

கடலூர்,
**2011 ஜூலை 14.**

**வே. அமுதவல்லி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

**கடலூர் மாவட்டம், குமராட்சி ஊராட்சி ஒன்றியம், வரகூர் ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் ஆ8/5711/2009.)*

**No. VI(2)/396(a-2)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கடலூர் மாவட்டம், குமராட்சி ஊராட்சி ஒன்றியம், வரகூர் ஊராட்சி தலைவர் திரு. இரா. குமார் என்பவர் அரசாணைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சி நிதியில் இழப்பினை ஏற்படுத்தி பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் முறைகேடுகள் உறுதிபடுத்தப்பட்ட நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலரின் குறிப்புரை அடிப்படையிலும் உரிய அனுமதியின்றி முறைகேடாக தொகை எடுத்து கையாடல் செய்யப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் ஊராட்சி தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அரசு நிதியை கையாடல் செய்து இழப்பு ஏற்படுத்திய வரகூர் ஊராட்சி தலைவர் திரு. இரா. குமார் என்பவரை வரகூர் ஊராட்சி தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த உத்தரவு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**வே. அமுதவல்லி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

கடலூர்,
2011 ஜூலை 15.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU